உ

முருகன் துணை.

திருப்போரூர்

# முருகர் சிந்து.



சென்னை சூளை

பெரியநாயகியம்மன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

69°

உ

முருகர் துணை.

திருப்போரூர்.

# முருகர் சிந்து.

சுந்திரமுருகர் சிந்தெனும்பாட்டை
விந்தையதாயுரைக்க விநாயகா
உன்னடியுந் துணையே 1

திருத்தனிமுருகா திருமகன்மருகா
வருத்தஞ்செய்யாமலிப்போ முருகையா
வந்தெனையாளுமையா 2

தணிகாசலவாசா தெய்வானைநேசா
பணியுமடியேனிடர் முருகையா
போக்கியெனையாளுமையா 3

எட்டிகுடிவேலா உமையவல்லிபாலா
சிட்டர்தொழுஞ்சீலா முருகையா
சிறியேனைவந்தாளுமையா 4

செந்திற்பதியானே சேவற்கொடியானே
இந்திரர்போற்றும்வேல் முருகையா
எளியேனைக்காருமையா 5

சிங்காரவேலா சூரர்கள்காலா
    கங்காதரன்பாலா முருகையா
    கருணைபுரிந்தாளுமையா 6

பழனிமலையாண்டி பாதமதைவேண்டி
    தொண்டனடியோனிடர் முருகையா
    தொல்வினையைத்திருமையா 7

திருப்போரூரானே திருச்செந்திலூரானே
    வருத்தப்படுவோனே முருகையா
    வந்தாண்டுகொள்ளுமையா 8

சண்முகதேவா சாஹித்யபாவா
    உன்மனமுமிறங்கி முருகையா
    உகந்தென்னையாளுமையா 9

கந்தாகுகனே கதிர்வேல்முருகா
    எந்தாயிதுவேதருணம் முருகையா
    இணையடிதந்தாளுமையா 10

ஆறுமுகநாதா அடியேன்மேல்வாதா
    வேறுமுகம்பாராமல் முருகையா
    வந்தென்னையாளுமையா 11

உன்பதந்தானே உறுதியாய்நானே
    எண்ணித்துதிப்பதற்கு முருகையா
    எண்ணிமனந்தாளுமையா 12

எந்தன்மீதே னித்தனைவாது
சந்தஞ்செய்யாது முருகையா
சற்றுமுகம்பாருமையா 13

உனையன்றிவேறே தெய்வமுண்டோகூறு
எனைவந்தாளுதற்கே முருகையா
இதுசமயம்பாருமையா 14

உந்தனைத்தேடி உருகினேன்வாடி
வந்தனையேகோடி முருகையா
வரமருள்கோடியையா 15

கல்விப்பொருளால் கருத்தில் துதிக்கில்
செல்வப்பொருளளித்து முருகையா
செல்வனையாளுமையா 16

பாவியிலும்பாவி பாரிலுனைத்தாவி
கூவிக்கதறுமுந்தன் முருகையா
குழவியெனையாளுமையா 17

பவளச்செவ்வாயா பார்புகழ்தூயா
மூவர்கள்சகாயா முருகையா
முத்திதந்தாளுமையா 18

மாமலர்ப்பாதா மறையவர்போதா
தாமதஞ்செய்யாமல் முருகையா
தமியேனைக்காருமையா 19

புள்ளிமயிலேறும் வள்ளிமணவாளா
வள்ளமுகவழகா முருகையா
வடியேனைக்காருமையா 20

சுரர்துதிநாதா நிரைததுபோதா
மருமலர்பாதாவுந்தன் முருகையா
மனமகிழ்ந்தெனையாளையா 21

அல்லும்பகலும் அறுபதுநாழிகை
அல்லல்படுமெனையும் முருகையா
ஆதரித்தாளுமையா 22

விளங்கியவேதம் விண்ணோர்கணிதம்
களங்கமறபோற்றிப்பதம் முருகையா
காணநான்வாருமையா 23

மதனவிநோதா மயமலைநாதா
நிதமலர்கொண்டுபணி முருகையா
நேயனையாளுமையா 24

நித்தமுனைத்தேடி யேத்திபதம்பாடி
நத்துகின்றவடியேனை முருகையா
நீதியுடனாளுமையா 25

ஓதுபவர்தங்கள் உள்ளத்திருக்கும்
வேதப்பொருளேயெந்தன் முருகையா
வினைதீரப்பாருமையா 26

அல்விடுநீரா ஆறுமுகத்தீரா
துள்ளிமயிலேறிவந்தே முருகையா 27
தொண்டனேக்காருமையா

அஞ்ஞானந்தன்னே அகலும்படிக்குன்னே
மெஞ்ஞானத்தாயற்றுக்கும் முருகையா 28
மைந்தனேயாளுமையா

வேதவிநோதா வேந்தர்கணீதா
நாதாவுன்பாதமதை முருகையா 29
நம்பினதினுலெனேயாளுமையா

கன்னியரைக்கண்டு காமன்கணேக்கொண்டு
உன்னிடபாதம்மறந்து முருகையா 30
உன்னருள்தாருமையா

மங்கையரைப்பாராமல் மயங்கித்திரியாமல்
தங்கத்திருவடிகள் முருகையா 31
தந்தாண்டுகொள்ளுமையா

ஐம்புலனுலே அன்பாயுன்மேலே
தென்பாயான்பாட முருகையா 32
துன்பமதைத்தீருமையா

ஆனந்தமாக அடியேனுக்காக
தானந்தமாகவந்து முருகையா 33
தமியேனேக்காருமையா

பாலன்படுந்துயரம் பாரெல்லாம்புகழும்
கோலப்பதந்தந்து முருகையா
குறைவின்றியாளுமையா 34

கலிந்துமெலியாமல் நாடோறும்வாடாமல்
கலியனும்வாராமல் முருகையா
காப்பதுன்பாரமையா 35

சிறியவன்பானும் செய்தபிழைதானும்
கருணையுடன்பொருத்து முருகையா
கனிவோடுரட்சியுமையா 36

வஞ்சகந்தீர வடியேன்கடைத்தேற
கொஞ்சங்கடைக்கண்வைத்து முருகையா
கிருபைபுரிந்தாளுமையா 37

சம்சாரந்தன்னில் சார்ந்துலகில்
இம்சைப்படுமெனையும் முருகையா
ஈடேறப்பாருமையா 38

அன்னைதந்தைநீ ஆதரிப்பாயே
உன்னையன்றிவேறுதுணை முருகையா
ஒருவருமில்லையையா 39

பத்தியாயுன்னை போற்றவுமென்னை
சத்தியமாகவுந்தன் முருகையா
சித்தம்வைத்தாளுமையா 40

பொன்னுலகத்தில் புரந்தரனைக்காத்ததுபோல்
என்னையுமேகாத்தன் முருகையா
இன்பம்வைத்தாளுமையா 41

நிலமையாயுன்னை நினைத்தோர்கடம்மை
உலகிலலையாமல் முருகையா
உருதியுடனாளுமையா 42

கோடிகொடிபிடிக்க குன்றுபோல்வந்துநீ
ஆபத்தைதீர்த்திடுவாய் முருகையா
அடியேனைக்காருமையா 43

சத்திவடிவேலெடுத்து சங்கரனார்தன்மகனே
பக்தியுடன்றொழுதேன் முருகையா
பட்சம்வைத்துக்காருமையா 44

வள்ளிமணவாளா வர்ணமயில்வீரா
புள்ளிமயிலேறிவரும் முருகையா
என்னை அன்புடன்காருமையா 45

பாசமுடனோடும் பக்தர்பவமோடும்
தலம்துதிகந்தப்பன்பாடும் முருகையா
தமிழ்நீயருள் தாருமையா. 46

முருகர்சிந்து முற்றிற்று.